# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

வாழ்வு தரும் நீரைப் பருகி விண்ணுலக தாகத்தைத் தணிக்க இன்றைய தவக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடனே அழைக்கப்பட்டிருக்கின்றோம். உண்பது எதுவெனினும் தாகம் தீர்க்க உகந்தது நீர் மட்டுமே. இவ்வுலக தாகம் நீரால் தணிந்துவிடும். ஆனால் நிலைவாழ்வு பெற வேண்டும் என்ற ஆன்ம தாகம் மீட்பர் இயேசு சிந்திய இரத்தத்தினால் மட்டுமே பூர்த்தியடையும். வாழ்வின் முழுமையைத் தேடி அடைய இறைவனின் கரத்தினால் அணைக்கப்பட்டு வழிநடத்தப்பட இப்பலியில் வேண்டுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில், இறைவனின் வியத்தகு செயல்களை அறிந்து, அனுபவித்த இஸ்ரயேல் மக்கள் தண்ணீர் இல்லை என மோசேக்கு எதிராக முறுமுறுத்ததை விடுதலைப் பயண நூலில் காண்கின்றோம். இவ்வுலகத் தேவைகளில் ஒன்றாகிய நீர் குறை பட்டதும் இஸ்ரயேல் மக்கள் முறுமுறுக்கின்றனர். நாமும் வெற்றி பெற்றால் இறைவனை போற்றுதலையும், சோதனைகளின் போது முறுமுறுப்பதையும் காண்கிறோம். இவ்வுலக சோதனைகள் என்பது இறைவன் நமது திறமையை உலகுக்கு வெளிப்படுத்த தந்த பரீட்சைகள். இறைவன் துணையோடு சோதனைகளை சாதனையாக்குவோம்.

இன்றைய நற்செய்தியில், “நானே அவர், நானே கிறிஸ்து” என்று தன்னை வெளிப்படுத்துகின்றார் இயேசு. காலிக் குடத்தோடு வந்த பெண் இயேசுவின் வருகையினால் நிறைவடைகிறாள். இயேசுவின் வருகை தாகத்தை நீக்குகிறது. குறைகுடமாகிய நம்மை நிறை குடமாக்குகிறது. மக்கள் மனதில் மண்டிக்கிடந்த மன இருள் அகற்றி, மனுமகனை அறிந்து கொள்ளும் ஒளியை ஏற்றுகிறது. காலிக்குடங்களாய் அவரது காலடியை அண்டுவோம். கழுவி தூய்மையாக்கி நீரால் நிரப்புவது இயேசுவின் செயல். அத்தகைய வரத்தைப் பெற்றுக்கொள்ள இப்பலியில் மன்றாடுவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. வாழ்வுதரும் ஊற்றே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர்கள், பணியாளர்கள் திருச்சபை என்னும் பாறையிலிருந்து வழிந்தோடும் ஜீவ தண்ணீரை மக்கள் அனுபவிக்கச் செய்து, அன்பு, அமைதி, நீதியின் தாகத்தைத் தணித்து, பிறரோடு பகிர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. காலி குடங்களை ஜீவ தண்ணீரால் நிரப்புவரே எம் இறைவா!

எம் நாட்டின் ஒவ்வொரு வளமும் காலிக்குடங்களாய் மாறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அன்பாலும் ஆசியாலும் அமைதியாலும் நிரப்ப வேண்டியும், நாட்டை ஆளுவோர் எடுக்கும் அதிகாரப் போக்கினை வெளிப்படுத்தும் சட்டதிட்டங்கள் திரும்ப பெறப்பட்டு, அமைதி நிலவ வழி அமைக்க தேவையான நல்லறிவை ஆட்சியாளர்களுக்கு தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. சமாரியப் பெண்ணையும் சமமாக கருதியவரே எம் இறைவா!

சமூகம், பொருளாதாரம் மற்றும் அறநெறி அடிப்படையில் ஏற்படுத்தப்படும் ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டு, அனைவரும் சமம் என்ற நிலை ஏற்படவும், வறுமை, தனிமை, சோர்வு என்று மனமுடைந்து வாழும் அனைத்து மக்களும், உம் அருளால் மதிப்பையும் பாதுகாப்பையும் பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் மழையை பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய இயற்கை கால சூழ்நிலை நிலவி, வேளாண்மை ஏற்றம் பெறவும், குடும்பங்களில் அன்பு, அமைதி, மகிழ்ச்சி நிறைந்து இருக்கவும், உறவுகள் பேணப்படவும், பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வை எழுதி, வெற்றி பெற தேவையான ஞானத்தைத் தரவும், வேலைவாய்ப்பை எதிர்நோக்கியிருக்கும் அன்பர்கள் உம் அருளால் பெற்றுக் கொள்ளவும், திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் ஆசீரைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com